# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு

*சுகாதார அமைச்சு*

## இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை அலுவலர்களை விசேட நிபுணத்துவ தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை அலுவலர்களை விசேட நிபுணத்துவ தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக 2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிரல் அமைச்சுக்குரிய நிறுவனங்களில்/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை புரியும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :**

(i) ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இல் அல்லது அதற்கு மேற்பட்ட தரம் ஒன்றின் ஆயுர்வேத அலுவலராக இருத்தல் ;

(ii) ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் IV ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் இலங்கை அரச மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் 03 ஆண்டுகளுக்கு குறையாத முழுநேர ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி மருத்துவ நிபுணத்துவ (Doctor of Medicine) அல்லது ஆயுர்வேத / சித்தாயுர்வேத/ யூனானி அறுவைசிகிச்சை நிபுணத்துவ (Master of Surgery) பட்டப் பின் பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஏற்புடைய பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்;

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல் ;

(iv) மேலே i மற்றும் ii இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற பின்னர் கற்ற பாடத்திற்கு மேலதிகமாக ஆயுர்வேத திணைக்களத்தின் விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 02 ஆண்டுகளுக்கு குறையாத முழுநேர சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சி பெற்ற பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத/சித்தாயுர்வேத/யூனானி பட்டப்பின் பட்டப் படிப்பு நிறுவனம் ஒன்றில் தாபிக்கப்படும் கற்கை சபையின் (Board of Study) பதிவுச் சான்றிதழ் (Board of Certificate) பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே iv இல் குறிப்பிடப்பட்ட கற்கைச் சபை தாபிக்கப்படும் வரை மேலே i முதல் iii வரையான தகைமைகளைப் பூர்த்தி செய்த பின்னர் கற்ற பாடங்களுடன் தொடர்புடைய ஆயுர்வேத திணைக்களத்தின் விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 02 ஆண்டுகளுக்கு குறையாத முழுநேர சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சி பெற்றிருத்தல் எனும் தகைமையை மாத்திரம் கருத்திற் கொண்டு விசேட நிபுணத்துவ தரத்திற்கு பதவியுயர்த்தப்படும். நிலவும் வெற்றிடங்களின் பிரகாரம் மத்திய அரசின் கீழ் மற்றும் மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்படும்.

**பதவியுயர்வுத் திட்டம்**.-

பதவி வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் (ஒவ்வொரு ஆண்டும் சனவரி 01 ஆந் திகதி மற்றும் யூலை 01 ஆந் திகதிக்கு) கடமையில் ஈடுபட்டுள்ள மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படும். நியமன அதிகாரியால் நேர்முகப் பரீட்சை சபையை நியமித்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய புள்ளி வழங்கும் நடைமுறையை அங்கீகரித்தல் ஆகியன மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் ஏற்புடைய நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரைகள் அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் நியமன அதிகாரிக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்குறித்த தகைமைகளை உறுதி செய்வதற்காக கல்விசார் மற்றும் தொழில்சார் அனுபவம் தொடர்பான சான்றிதழ் மற்றும் ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

02. 01.01.2023 இல் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை

| தொ இல. | நிறுவனம் மாகாண சபை | வெற்றிடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020.01.01 2020.06.30 | 2020.07.01 2020.12.31 | 2021.01.01 2021.06.30 | 2021.07.01 2021.12.31 | 2022.01.01 2022.06.30 | 2022.07.01 2022.12.31 | 2023.01.01 |
| 01. | ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை | 06 | 06 | 08 | 09 | 04 | 04 | 05 |
| 02. | பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் | 03 | 03 | 03 | 03 | 02 | 02 | 03 |
| 03. | மேல் மாகாணம் | 10 | 10 | 09 | 08 | 08 | 08 | 07 |
| 04. | தென் மாகாணம் | 09 | 09 | 09 | 09 | 09 | 09 | 09 |
| 05. | வடமேல் மாகாணம் | 08 | 08 | 08 | 07 | 05 | 05 | 05 |
| 06. | மத்திய மாகாணம் | 09 | 09 | 09 | 08 | 08 | 08 | 08 |
| 07. | சபரகமுவ மாகாணம் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 08. | ஊவா மாகாணம் | 08 | 08 | 08 | 08 | 08 | 08 | 08 |
| 09. | வடமத்திய மாகாணம் | 07 | 07 | 07 | 07 | 07 | 07 | 07 |
| 10. | கிழக்கு மாகாணம் | 09 | 09 | 09 | 09 | 09 | 09 | 09 |
| 11. | வட மாகாணம் | 08 | 08 | 08 | 08 | 11 | 11 | 11 |
| | **மொத்தம்** | **87** | **87** | **88** | **86** | **81** | **81** | **82** |

03. மேற்குறித்தவாறு தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் (விண்ணப்பத்தை www.ayurveda.gov.lk ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்) தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.03.04 ஆந் திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவர் ஊடாகவும். தற்போது ஓய்வுபெற்றுள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியிலும் பதிவுத் தபாலில் "ஆயுர்வேத ஆணையாளர் நாயகம், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களை விசேட நிபுணத்துவ சேவைக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. விசேட நிபுணத்துவ பதவி ஒன்றின் ஆரம்ப சம்பளப் படிமுறை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 3/2006 பிரகாரம் SL-3-2016 இற்கு (ரூபா 388,000.00 - 120,400.00) ஏற்புடையதாகும்.

05. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் நடைமுறை பின்வருமாறு :

1. **சேவைக் காலம் :**

**(ஆகக்கூடிய புள்ளி 60)**

ஆயுர்வேத மரத்துவ சேவை தரம் II இன் சேவைக்காலம்
(ஒவ்வொரு ஆண்டுக்கும் 2 புள்ளிகள் வீதம்)

ஆகக்கூடிய புள்ளிகள் 30

ஆயுர்வேத மரத்துவ சேவை தரம் I இன் சேவைக்காலம்
(ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 புள்ளிகள் வீதம்)

ஆகக்கூடிய புள்ளிகள் 30

**குறிப்பு :**
சேவை மூப்புக்கு புள்ளிகள் வழங்கும் போது, வருடம் ஒன்றுக்கு குறைவான காலத்திற்காக விகிதாசார ரீதியில் அ. சே. ஆ. சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

ஆகக்கூடிய புள்ளிகள் 20

*2.* **அனுபவம்** :

*பட்டப் பின் பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் இரண்டு ஆண்டு கால முழுநேர சிகிச்சை/ஆராய்ச்சிப் பயிற்சியின் பின்னரான ஒவ்வொரு ஆண்டுக்காகவும் சிகிச்சை/ஆராய்ச்சி துறையில் பணியாற்றியமைக்காக 02 புள்ளிகள் வீதம்.*

*3.* **துறைசார்ந்த மேலதிக கல்வி அல்லது தொழில்சார் தகைமைகள்**

(ஆக்கூடிய புள்ளிகள் 20)

(i) *கல்வித் தகைமைகள்* :

(10 புள்ளிகள்)

(ஆ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான முதுமாணி (M. sc.) - 06 புள்ளிகள்

(இ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான முதுதத்துவமாணி (M. Phill) அல்லது மருத்துவ (MD) (கல்விச் சபையின் சான்றிதழ் பெறாத) - 08 புள்ளிகள்

(ஈ) ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான முனைவர் (Ph. D) அல்லது மருத்துவ (MD) (கல்விச் சபையின் சான்றிதழ் பெற்ற) - 10 புள்ளிகள்

**குறிப்பு** :

*மேலே இலக்கம் 01 இன் (அடிப்படைத் தகைமைகள்) அத்தகைமைகளின் கீழ் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகளுக்காக இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் ஆகக்கூடிய தகைமைகளுக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்.*

(ii) *ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்* :

(i) ஏற்புடைய துறையில் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளுக்காக (10 புள்ளிகள்)

(ii) ஏற்புடைய துறையின் சர்வதேச ரீதியிலான ஆராய்ச்சி மற்றும் வெளியீடு ஒன்றுக்காக 10 புள்ளிகள் வீதம்

(iii) ஏற்புடைய துறையின் தேசிய ரீதியிலான ஆராய்ச்சி மற்றும் வெளியீடு ஒன்றுக்காக 05 புள்ளிகள் வீதம்

**குறிப்பு** :

*ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை மதிப்பீடு செய்யும் போது இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்ட அளவுகோள்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.*

(மொத்தம் 100 புள்ளிகள்)

*06.* **தெரிவு செய்யப்படும் முறை** : நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களின் கல்வி, தொழில், சேவை அனுபவம் மற்றும் சேவை மூப்பு தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த புள்ளி வழங்கும் நடைமுறைக்கு அமைவாக ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவால் விசேட நிபுணத்துவ சேவைக்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*07.* இந்த அறிவித்தல் மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவை குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

பி. ஜீ. மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுவசிரிபாய,
கொழும்பு - 10,
2024.01.24.

**இணைப்பு 01**

வெளியீட்டு மதிப்பீட்டுக்காக ஏற்புடையதாக்க வேண்டிய பிரமாணங்கள்

I. **வெளியீடுகள் :**

(அ) ஜேர்னல் பத்திரங்கள் - மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இலக்கமிடப்பட்ட வெளியீட்டுத் தொடரில் வெளியிடப்பட்ட கல்விசார் முக்கியத்துவம் கொண்ட முழுமையான பிரதியுடன் கூடிய கட்டுரை அல்லது ஆக்கம்;

(ஆ) மாநாட்டு பத்திரங்கள் பிரித்தெடுப்பு இறுதியாக பிரதி செய்யப்பட்ட கட்டுரைகள் கல்விசார் முக்கியத்துவம் கொண்ட மாநாடுகள், சபைகள், கருத்தரங்குகள், கல்வி மாநாடுகள், உரையாடல் மண்டபங்கள், செயலமர்வுகள் அல்லது கல்விசார் மாநாடுகள் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட அறிக்கைகள்.

I. நூலாசிரியர்கள் பலரது பங்கேற்பில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் தொடர்பில் விண்ணப்பதாரரின் பங்களிப்பின் அளவு தெளிவாக காட்டப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பங்களிப்பின் அளவின் விகிதாசாரமாக விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

II. ஒரே தரவு/ஆராய்ச்சி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும், பெரும்பாலும் சமமான முடிவுகளுக்கு வந்துள்ள வெளியீடுகள் வெவ்வேறான வெளியீடுகளாக கருதப்பட மாட்டாது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் புள்ளி வழங்குவதற்காக ஒரு வெளியீடு மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை அலுவலர்களை விசேட நிபுணத்துவ தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :..............................................................................................................

02. முழுப்பெயர் :.............................................................................................................................

03. பிறந்த திகதி :.............................................................................................................................

04. தேசிய அடையாள அட்டை இல. :........................................................................................................

05. (i) நிரந்தர முகவரி :.......................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் :...................................................................................................................

06. (i) சேவை நிலையத்தின் முகவரி :........................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் :...................................................................................................................

07. (i) முதல் நியமனத் திகதி :...................................................................................................................

(ii) தற்போதைய தரம் :......................................................................................................................

(iii) தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :..................................................................................................

(iv) 2022.06.30 இல் தரம் II இல் சேவைக் காலம் :..........................................................................................

விண்ணப்ப முடிவுத்திகதி 2024, மாச்சு 01 ஆகும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (களம்சார்/அலுவலகம்சார் அலுவலர்-வகை 02 சேவைப்பிரிவில்) தரக்கட்டுப்பாட்டு அலுவலர் தரம் II பதவியில் காணப்படுகின்ற 08 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றுகின்ற தகைமையுடைய அலுவலர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. மீன்பிடிப்படகுகள்,மீன்கள் ஏலம் விடப்படும் இடங்கள், மீன்களை தரையிறக்கும் இடங்கள், மீன் களஞ்சியம், ஏற்றுமதிக்காக மீன் உற்பத்திகளை தயார் செய்யும் இடங்கள் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை சோதனையிடல், உத்தியோகபூர்வ மாதிரிகளை (ஐஸ், நீர், மீன்கள், மீன் சார்ந்த உற்பத்திகள்) பெறுதலும் அவற்றை ஆய்வுகூடங்களுக்கு வழங்குதலும், பரிசோதனை அறிக்கைகளை ஆய்வு செய்தல், கடற்றொழில் உற்பத்திகளை பரிசோதிப்பதற்கான ஆய்வுகூடங்களை அங்கீகரிப்பதற்காக சோதனையிடல், அங்கீகாரத்தின் பின்னர் அவசியமான சூழ்நிலைகள் பேணப்படுகின்றனவா என்பதை பரிசோதித்தல், கடற்றொழில் உற்பத்திகளுக்கு வழங்கப்படுகின்ற சுகாதாரச் சான்றிதழ்களை அத்தாட்சிப்படுத்துதல், மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்கின்ற வழிமுறையை ஆய்வு செய்தல், இலங்கை தரநிலைகள் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பரிசோதனைகளையும் ஆய்வுகளையும் கண்காணித்தல், சர்வதேச பிரமாணங்களுக்கு அமைவாகவும் ஐரோப்பிய பொருளாதார ஆணையத்தின் அளவுகோல்களுக்கமைவாகவும் மீன் ஏற்றுமதி நடவடிக்கைகளை பேணிக் கொண்டு செல்லல் தொடர்பாக கண்காணித்தல், நவீன தொழில்நுட்பம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு முகாமைத்துவ முறைகள் தொடர்பாக மீன் ஏற்றமதியாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல், மீன் வளர்ப்பில் ஈடுபடும் மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்றன இப்பதவியின் கடமைகளாகும்.

01. **சேவை விதிமுறைகள்.**- அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தரக்கட்டுப்பாட்டு அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்தானதுமாகும்.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம்.**- சம்பளக் குறியீட்டு இலக்கம்: MN 5-2016 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 36,605.00 - 10×660-11×755 - 15×930- ரூபா 63,460.00

03. **கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞானம், நுண்ணுயிரியல், விலங்கியல், இரசாயணவியல், கடல்சார் அறிவியல், உணவு விஞ்ஞானம், உணவுத் தொழிநுட்பவியல் போன்ற பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்கள் உள்ளடங்கிய விஞ்ஞான இளமானி பட்டமொன்றை பெற்றிருத்தல்

அல்லது

மேற்படி பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களை உள்ளடக்கிய விவசாய விஞ்ஞான இளமானி பட்டமொன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) பட்டப் பாடநெறி ஒன்றில் பிரதான பாடமொன்றாக ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம் பாடத்திற்கு சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல்

அல்லது

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை அல்லது அதனை விட உயர் மட்ட பரீட்சையொன்றில் ஆங்கில மொழி ஊடகத்தில் சித்தியடைந்திருத்தல்.

04. **தொழில் தகைமைகள் .**- ஏற்புடையதன்று

05. **அனுபவம்.**- ஏற்புடையதன்று

06. **உடல் தகைமைகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

07. **வேறு** :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த குணம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப் படுகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) விண்ணப்பம் கோரும் தினத்தில் அரச/மாகாண அரச சேவையில் ஓய்வூதியம் உரித்தான பதவியொன்றை வகிப்பவராயிருத்தல் வேண்டும்.
(v) அரச சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க ஒழுக்காற்று தண்டனையொன்று பெற்றிராதிருத்தல்.

08. **வயது எல்லை.**- விண்ணப்ப முடிவுத்திகதிக்கு 21 வயதிற்கு குறையாது மற்றும் 35 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.(அதற்கமைவாக வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவதற்கு 2003.03.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1989.03.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்)

09. **ஆட்சேர்ப்பு முறைமை.**- எழுத்துப் பரீட்சையொன்றினது முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% இற்கு குறையாத புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கிடையில் முன்னுரிமை அடிப்படையில் உயர்மதிப்பெண்களை பெற்ற, காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகளை பொது நேர்முகத் தேர்வு ஒன்றிற்கு உட்படுத்தி திறமைத் தொடரில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். பொது நேர்முகத் தேர்விற்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் அடிப்படை தகைமைகள் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒருவர் தான் கோரிய ஊடக மொழியில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடும் மொழி ஊடகத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை.**-

| பாடங்கள் | நேரம் | மொத்த மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| I. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| II. கட்டுரையும் சுருக்கமும் | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| III. பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

பாடத்திட்டம் கீழ் காட்டப்பட்டுள்ளது :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| I. நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான வர்ணனை மற்றும் பகுப்பாய்வுத்திறன், துல்லியமான நிகழ்வுகளை கணிப்பிடும் திறன், பொது அறிவு மற்றும் நுண்ணறிவை அளவிடலை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இது கணிதப் பிரசினங்கள், பொது அறிவு, சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்பான வினாக்களை கொண்ட பல்தேர்வு வினாப்பத்திரமொன்றாகும். |
| II. கட்டுரையும் சுருக்கமும் | தற்போதைய சமூக நிகழ்வொன்று தொடர்பான வெளியீடொன்றை அல்லது கலந்துரையாடல் குறிப்பொன்றை வாசித்து விளங்கி பகுப்பாய்வு செய்தல் தொடர்பான ஆற்றலை அளவிடலும் கட்டுரை/சுருக்கம் எழுதும் ஆற்றலை அளவிடலும் தொடர்பான வினாப்பத்திரம் |

